முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.1001/2023 பெயர் : ராதா நாள் : 03.03.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இன்று நீதிமன்றத்திற்கு நானும், என் கணவரும் ஒன்றாகதான் வந்துள்ளோம் என்றால், சரிதான். எனது கணவர் விரைவு நீதிமன்றம் எண்.2 (FTC-2)-ல் ஆஜராகி சாட்சியமளித்துள்ளார் என்றால், சரிதான். STC.335/2021 வசந்தி என்பவர் தனது பொது அதிகார முகவர் நவீன்குமார் மூலம் எனது கணவரை எதிரியாக சேர்த்து தாக்கல் செய்யப்பட்ட காசோலை வழக்கு, 12.09.2021-ம் தேதியில் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2-க்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் இந்நீதிமன்றத்தில் வசந்தி அசல் வழக்கு 1041/2023 தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி தகவல்களை மறைத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல, என் அண்ணன் உறவினர்களிடம் பத்திரம், காசோலை ஆகியவற்றை கொடுத்து இதுபோன்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வசந்தி எனது குடும்ப உறுப்பினர் இல்லை என்று சொன்னால், அவர் எனக்கு நெருங்கிய உறவு முறை ஆவார். IASJ நீதிமன்றத்தில் இந்த வழக்கின் வாதியின் கணவர் அசல் வழக்கு எண்.1000/2023 தாக்கல் செய்யப்பட்டு, அதில் ரூ.9 லட்சமும், அதற்குரிய வட்டியையும் செலுத்த வேண்டும் என தீர்ப்பும், தீர்ப்பாணையும் பகரப்பட்டது என்றால், சரிதான். அதை இன்று வரை அசல் மற்றும் வட்டி செலுத்தவில்லை என்றால், பொய்வழக்கு என்பதால், மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம், மேல்முறையீடு பற்றிய விபரம் வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். அசல் வழக்கு எண்.1000/2023 வழக்கு 18.09.2025 தேதியில் தீர்ப்பு பகரப்பட்ட பின்னிட்டு, இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதி மீண்டும் விசாரிக்க

கோரியுள்ள மனு 13.10.2025-ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால், அந்த விபரம் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.1000/2023 விசாரணையின் போது, IASJ நீதிமன்றத்திற்கு நான் சென்றிருந்தேன். எனது கணவர் மீது என்னனென்ன வழக்குகள் போடப்பட்டுள்ளது என்ற விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்று சொன்னால், சரிதான். அனைத்து வழக்குகளும் பொய் வழக்கு என அவற்றை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், எனது கணவரை கேட்டால் தான் தெரியும். வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக தான் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, விசாரணை செய்கிறோம் என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.3 முதல் சா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தொடர்பில்லாத ஆவணங்கள் என்று சொன்னால், சரியல்ல. பொய்யான ஆவணங்களை கொண்டு நீதிமன்றத்தில் வழக்கை காலதாமதம் செய்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல. வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கில் விடுபட்ட சங்கதிகள் எதுவும் கூறாமல், சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எனது சாட்சியம் பொய்சாட்சியம் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு காசோலையை பற்றி நானும், எனது கணவரும் ஒப்புக் கொண்டதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.